

திருக்கோவிலூர் ஒன்றியம், செங்கனாங்கொல்லை மற்றும் பெருவங்கூர் கிராமங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ள 110/22 KV துணை மின் நிலைய கட்டுமானப் பணிகளை அமைச்சர்கள் எ.வ.வேலு, சா.சி.சிவசங்கர் ஆகியோர் தொடங்கி வைத்து உரையாற்றினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தே.மலையரசன் எம்.பி. உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வி. கணேசன் தீவிர வாக்காளர் சேர்க்கை முகாமை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். உடன் நகரச் செயலாளர் க.தண்டபாணி, விருத்தாசலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கனக.கோவிந்தசாமி நகர துணைச் செயலாளர் எஸ்.இராமு, சிறுபான்மை அணி அமைப்பாளர் அன்சார் அலி, மாவட்டப் பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர் தர்ம.மணிவேல், பட்டி சு.வசந்தகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் தீவிர வாக்காளர் சேர்க்கை பணியில் ஈடுபட்டனர்.

## ரூ.59.93 கோடியில் கல்விசார் கட்டடங்கள்

# உயர்கல்வித் துறை சார்பில் 213 பேருக்கு பணி நியமன ஆணை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ. 21 -**

**உயர்கல்வித்துறை சார்பில் ரூ.59.93 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை திறந்து வைத்து, 44 அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், செய்து உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற் கல்வி) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 213 நபர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் கடலூர், விழுப்புரம், திருப்பத்தூர், அரியலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களிலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 59 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து, தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மேலும், 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசு பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் "புதுமைப்பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலத் "தமிழ்ப் புதல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூபாய் 1000/ உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட உயர் கல்வித் துறை கட்டடங்களின் விவரங்கள்:**

உயர்கல்வித் துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் கடலூர் மாவட்டம், வடலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 13 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம். திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 15 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம், மயிலாடுதுறை மாவட்டம், மணல்மேடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடம்;

என மொத்தம் 59 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள, உயர்கல்வித் துறை சார்ந்த கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) மேம்படுத்திடும் வகையில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாட்டில் உள்ள 44 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளைத் உலகத் தரமான தொழிற்துறை 4.0 தரங்களுக்கு ஏற்ப திறன்மிகு மையங்களாக (Centre of Excellence) 2,590.303 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதற்கு Tata Technologies Limited நிறுவனத்திற்கும், தமிழ்நாடு அரசின் தொழில்நுட்ப கல்வி ஆணையரகத்திற்கும் இடையே முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது, தொழிற்துறையுடன் இணைந்து கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்புகளை நவீனமயமாக்குதல், புதிய தொழிற்சார் பாடத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துதல், மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது.

மேலும், இத்திட்டம் தொழிற்துறையின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் திறன்மிக்க மனித வளங்களை உருவாக்க உதவுவதோடு, தொழிற்துறை மற்றும் கல்வித்துறைக்கிடையேயான இடைவெளியைக் குறைத்து, தொழில்துறையின் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி பெற்ற, உயர்திறன்மிக்க தொழில்நுட்ப வல்லுநர்களாக மாணவர்கள் உருவாக்கப்படுவர்.

**உதவிப் பேராசிரியர்கள், உதவி நூலகர்கள் மற்றும் உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 190 உதவிப் பேராசிரியர்கள், 12 உதவி நூலகர்கள் மற்றும் 11 உதவி இயக்குநர் (உடற்கல்வி) பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு, பின்னர் அண்ணா பல்கலைக்கழகத்தால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, இப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் பொ.சங்கர், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, அண்ணா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் வெ. குமரேசன், டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஷைலேஷ் சரப், உலகளாவிய தலைவர் (அரசாங்க திட்டங்கள் மற்றும் திறன்கள்) சுஷில் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பன்னிரெண்டாம் வகுப்பு மாணவி கொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியது;

# போதை வஸ்துக்கள் விற்பனையை முதல்வர் இரும்புக் கரம் கொண்டு தடுத்து வருகிறார்!

## மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!

*திருச்சி, நவ.21-*

*பொன்மலைப்பட்டி பகுதியில் உள்ள புனித வளனார் பெண்கள் மேல் நிலைப்பள்ளி,*

*புனித சிலுவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன்மலை*

*திரு இருதய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பொன் மலைப்பட்டி*

*அரசு ஆதி திராவிட நல பெண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்டூர்*

*அரசு ஆதி திராவிட நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, காட்டூர்*

*முக்குலத்தோர் மேல் நிலைப்பள்ளி, திருவெறும்பூர்*

*பாய்லர் பிளாண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கைலாசபுரம்*

*பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, கைலாசபுரம்*

*அரசு மேல்நிலைப் பள்ளி, அரசங்குடி*

*குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, துவாக்குடி மலை*

*அரசு மேல்நிலைப் பள்ளி, துவாக்குடி*

*அரசு மேல்நிலைப் பள்ளி, தேனேரிப்பட்டி*

*அரசு மேல்நிலைப் பள்ளி, சோழமாதேவி ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.*

*இவ்விழாவில் ஆண்கள் 589 பெண்கள் 1043 மொத்தம் கூடுதல் 1632 ஆகிய மிதிவண்டிகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்.*

*இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். பாலாஜி , முதன்மைக்கல்வி அலுவலர் கோ.கிருஷ்ணப் பிரியா, மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர்கள் தர்மராஜ், ரமேஷ், நீலமேகம், சிவக்குமார் தாஜுதீன் கழக நிர்வாகிகள் கே. எஸ்.எம். கருணாநிதி, காயாம்பு, தங்கவேலு, செல்வராஜ், பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

*அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறும் போது..,*



*பன்னிரண்டாம் வகுப்பு மாணவி கொலை செய்திருக்கும் கூடிய சம்பவம் கண்டிக்கத்தக்கது படிக்க வரும் மாணவிக்கு இது போன்ற நிகழ்வு பெற்றோர்கள் மனநிலைமையில் இருந்து பார்க்கும் போது வேதனையை தருகிறது சொந்த காரணத்திற்காக இந்த கொலை நடந்திருந்தாலும் கூட கண்டிப்பாக கண்டிக்கத்தக்கது.*

*20 லட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு மிக விரைவாக வழங்கப்படும்.*

*தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளில் போதைப்பொருள் இருக்கக் கூடாது என்பதுதான் தமிழக அரசின் நிலைப்பாடு குழந்தைகள் எந்த விதமான போதை பழக்கத்திற்கு அடிமையாகக் கூடாது என மகிழ் முட்டம் என்ற திட்டம் கொண்டு வந்து உள்ளோம். இந்த சம்பவத்தில் இரும்பு கரம் கொண்டு தடுத்துக் கொண்டிருக்கிறார் தமிழக முதலமைச்சர்*

*TET தேர்வு தொடர்பான ஆலோசனை கூட்டம் நாங்கள் வைத்துள்ளோம் யாரையும் விட்டுவிடாமல் அனைவரையும் உள்ளே கொண்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்கிறோம்.*

*தமிழகத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறோம் வளர்ச்சியில் இரட்டை இலக்கை வளர்ச்சி அடைந்த மாநிலம் தமிழகம் இதன் காரணமாகத்தான் பெருமையாக சொல்கிறார்கள் ஆனால் அந்த வளர்ச்சியையும் தடுக்கிறார்கள்.*


*வருவாய்த்துறை அதிகாரிகள் போராட்டம் என்பது தூண்டுதல் கிடையாது.*

*தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என என பிரதமர் கூறுவது ஒவ்வொரு முறையும் அவர் கூறிக் கொண்டு தான் இருக்கிறார் ஆனால் மக்கள் கண்காணித்து வாக்களிப்பார்கள் என்றார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்

### நவம்பர் 21 (2010)



**கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**